**இலங்கை பட்மிட்டன் சங்கம் – 2016**

-----------------------------------------------------------------------------------------------

இலங்கை பட்மிட்டன் சங்கத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, திரண்ட நிதியத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான நிறைவேற்றுக் குழுவின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திர்மானித்தல் நிறைவேற்றுக் குழுவின் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சங்கத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது

அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பட்மிட்டன் சங்கத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

நியமித்தின் 17 ஆம் பகுதியின் 19 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக செயற்திறனான ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காபரணமாக ரூபா 233,490 கிரயத்திலான கணனி உபபாகங்கள் முழுவதும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதற்கான மதிப்பீட்டு வழுவை நியமத்தின் 10 ஆம் பகுதியின் 18 ஆம் பந்தியின் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த மீள அறவிடக்கூடிய ரூபா 20,000 ஆன கிடைக்க வேண்டிய வைப்புக்களாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 374,740 தொகையான நிலையான சொத்துக்கள் திருத்தச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் நிலையான சொத்துக்கள் மற்றும் அதற்குரிய பெறுமானத்தேய்வு என்பன குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கணக்கு மீதிகளுக்குரித்தாக முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| செலுத்த வேண்டிய தீர்க்கப்படாத ஆரம்ப மீதிகள் - 2011 | 409,039 | உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |
| செலுத்த வேண்டிய தீர்க்கப்படாத ஆரம்ப மீதிகள் - 2012 | 470,039 | உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |
| முற்கொடுப்பனவு | 210,953 | உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |
| விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து பெறுவனவுகள் | 9,010,188 | பற்றுச்சீட்டுக்கள் மற்றும் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சங்கத்தின் நிதி விளைவுகள் ரூபா 383,171 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 251,803 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 131,368 ஆல் அதிகரித்திருந்தது. நிர்வாகச் செலவினம் ரூபா 1,337,927 ஆல் அதிகரித்திருந்த போதிலும் வருமானம் ரூபா 2,344,054 ஆல் அதிகரித்தமை மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் காலப்பகுதியில் அடையப்படக்கூடிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் உள்ளடக்கப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவையின் நிதிப் பிரமாணம் 133(1)(அ) பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடி/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டு ஆரம்பமாவதற்கு முன்னர் பாதீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சங்கத்தால் மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சங்கத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | கணக்கீட்டுக் கொள்கைகள் இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் கணக்கு வைக்கப்படாமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இயலுமான வகையில் பாதீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்று காணப்படாமை. |
| (இ) ஆவணங்களைப் பேணுதல் | கணக்கு விடயங்களுக்குரிய விரிவான அட்டவணைகள் தயாரிக்கப்படாமை |